


மீசாலை மேற்கைச் சேர்ந்த

## அமரர் சோமசுந்தரம் புவனேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17-01-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

# அமரர் சோமசுந்தரம் புவனேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17-01-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
மேலாம் தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்

# சோமசுந்தரம் புவனேஸ்வரி

அவர்கள்

மலர்வு 28-03-1952


உதிர்வு 04-12-2009

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விரோதிசேர் மார்கழி அபர பக்கம்
பூண்ட துதிகை தனில் – மாண்புடைய
ஈசனது தாள் சேர்ந்தார் புவனேஸ்வரி பேராள்
காசினியில் வாழ்வு விட்டேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

அன்பே உருவமதாய்
ஆறுதல் தரும் நிழலாய்
பண்பே நிதம் பழக்கி
பாசத்தொடு பல ஆற்றி
அம்மாவாய் ஆயாவாய்
ஆசை அப்பம்மாவுமாய்
நில்லாமல் ஓடி இங்கு
நீர் எம்மை உயர்த்தி இன்று
காற்றாகிப் போனீரே?
இவல்கின்றோம் உமை நினைத்து



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச தோத்திரம்



## விநாயகர் காப்பு

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாசமல ரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக் கெல்லாமானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வ கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிக்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

எழுகடல் மணலை அளவிடில் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபயம் எனதுடலுயிரும்
இனியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியும் எரிபுவி மறவி
கமலனும் மிகவும் அயர்வானார்
கடனுன தபயம் அடிமையுன் அடிமை
கடுகி உன்னடிகள் தருவாயே

விழுதிகள் அழகி மரகத வடிவி
விமலி முன்னருளும் முருகோனே
விரிதல மெரியக் குலகிரி நெரிய
விசைபெறும் மயிலில் வருவோனே

எழுகடல் குமுற அவுணர்கள் உயிரை
இரைகொளும் அயிலை உடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியூ
ரினில் நட மருவி பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கட்டி அணைத்திடும் பெண்டிரும
மக்களும் கால தச்சன
வெட்டி முறிக்கும் மரம்போல்
சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழக்கி அழுவார்
மயானம் குறுகி அப்பால்
எட்டி அடி வைப்பரோ இறைவா
கச்சி ஏகம்பனே

2. நல்லார் இணக்கமும் நின்பூசை
நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நெறி உளதோ
அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும்
வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா
கச்சி ஏகம்பனே

3. பிறக்கும் பொழுது கொடுவந்ததில் வை
பிறந்து மண்மேல
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை
இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன்
தந்தது என்று கொடுக்க அறியார்
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன்
கச்சி ஏகம்பனே

4. கல்லாப் பிளையும் கருதாப்பிளையும்
கசிந்துருகி நில்லா பிளையும்
நினையாப் பிழையும் நின் ஐஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அன்னவிசாரம் அதுவே விசாரம்
அதுவொழிந்தால் சொன்னவிசாரம்
தொலையாவிசாரம் நல் தோகையரைப்
பன்னவிசாரம் பலகால விசாரம்
இப்பாவி நெஞ்சுக் கென்ன விசாரம்
வைத்தாய் இறைவா கச்சி ஏகம்பனே

7. ஊரும் சதமல்ல உற்றார்
சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர்
சதம் அல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம்
கச்சி ஏகம்பனே

8. அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பிள்ளை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடனாய் அடியேனு மறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சி ஏகம்பநாதனே

9. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்
முடிவிலொரு பிடிசாம்பாய்
வெந்து மண்ணாவது கண்டு மின்றுழிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால்
பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே
அறிவாரில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சோமசுந்தரம் புவனேஸ்வரி அவர்களின் வாழ்க்கை வரலாறு

தெங்கும் பனையும் கமுகும் வாழையும்
எங்கும் கனிசொரி மாக்களும் பலாக்களும்
என்றும் பசுமை கொஞ்சிடும் அழகும்
நின்றுமே நிலவிடும் தென்ம ராட்சியில்
ஆலயம் பலபல பூசைகள் மணிகள்
கோலமாய் விளங்கும் மீசாலை மேற்கில்
விவசாயம் தன்னை விரும்பிய தொழிலாய்
தவமெனக் கொண்டான் அருளம் பலமும்
நலமுடன் வாழ்ந்திட திருமணம் கொண்டதில்
குலமகள் முத்துப் பிள்ளை தானும்
அறமெனக் கண்ட இல்லற வாழ்வில்
பெறலரிதா மெனப் பெற்ற மூவரில்
மூத்த மகளாம் மாணிக்கம் அடுத்து
காத்திட வந்த நல்லையா மகனென
ஈற்றிலே பிறந்தவள் இளையவள் தானென
சாற்றிட அம்பிகை நாமம் கொண்ட
புவனேஸ் வரியெனும் புண்ணிய வதியாளும்
அவனியில் வந்திட ஆறுதல் கண்டனர்.

மூவரும் வளர்ந்து ஓடியும் ஆடியும்
மேவிடும் கல்வியில் நாட்டம் காட்டியும்
ஆசையும் பாசமும் அன்பும் பரிவுமாய்
நேசமுடன் அவை நினைகையில் முன்னவள்
மாணிக்கம் திருமணம் செய்துமே ஏக
இளையவள் புவனமோ விக்கினேஸ் வராவிலே
ஆரம்பக்கல்வியைநன்கே பயின்று பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்து இருந்த சாவ இந்துவில்
கல்வியில் கவனம் தானது கொண்டு
நல்விதம் கல்வியைகற்றிடு நாளில்
தந்தை அருளம் பலனார் அரனை
சிந்தை செய்தே சென்று அடிசேர
தாயார் முத்துப் பிள்ளை தானும்
காயாம் தோட்ட மாதுளை தேசியென
அபிசேகக் கனிவகை அனைத்தும் பெற்று
அனைவரதமும் அவை வியாபாரம் செய்து
பெறும் அந்த நிறைவில் வளம் பல பெருக்கி
வாழ்ந்திடும் காலை பள்ளி வாழ்வில்
துடிப்பு மிக்காள் புவனேஸ் வரியாள்
ஈட்டினள் புகழை எனும்படி வாழ்ந்தாள்

அண்ணன் நல்லையா திருமணம் செய்து
ஆண்டுகள் சொற்பம் தான் அதுவும் ஏகி
காலம் சுழன்றிட காலனும் அண்ணனை
ஞாலம் விட்டே அழைத்துச் செல்ல
வீட்டுக் காணியில் தென்னை கமுகொடு
பயன்தரு மரங்கள் நாட்டி நீர் பாய்ச்சி
நயம் பல செய்திடு வகையில் பசுமையாய்
வளர்ந்தவை சோலையாய் சூழ்ந்துமே வாழ்த்த
ஆடு கோழி என வீட்டுப் பிராணிகள்
பாடு பட்டுப் பிரயாசை யுடனே
ஓய்வு என்பது வேலை மாற்றமே
ஆய்வு செய்தால் இவள் அகராதி என்றுமே
பார்த்தவர் கேட்டவர் பாங்கது கூறிட
சேர்த்தனர் சாதகம் பொருத்தமா என்று
கத்தரி வெண்டி புகையிலை பயிற்றை
தக்காளி புடோல் வள்ளிக் கொடியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை வடக்கு வேம்பிராய் தோட்டம் செய்
சங்கரப்பிள்ளையும் மனைவி செல்லம் மாவும்
இங்குற்ற இல்லற நல்லறப் பேறதால்
பெற்றிட்ட மக்களில் இரண்டாவது என்ன
உற்றவன் சோமசுந்தரம் பெயர் கொண்ட
நற்குண வாளன் நாதனாய்க் கொண்டு
திருமணம் பேசி நல்லதோர் நாளில்
இருமனம் கலக்க இணைத்தனர் பெரியோர்

மாவடி விநாயகன் தலமும் சென்று
சேவடி போற்றி திருவிழாக் காலத்தில்
அடி அழித்து வணங்கிய பின்பே
முடிப்பவள் விரதத்தை முறையெனப் புவனம்
பக்தியும் சுத்தியும் பரமன் அருளென
சக்தியாய் சோமுவிற்கு தகுந்த துணை என
நித்தியம் முன்றலைக் கூட்டிப் பெருக்கி
சுத்தி செய்திடுவர் இருவரும் சேர்ந்துமே

அயலவர் இவர்களின் ஒற்றுமை வியந்திட
முயன்றனர் தோட்டத்தில் பயிர்கள் செழிக்க
பல்லினப் பயிர்களும் பயனது கொழிக்க
தொல்லைகள் அகன்று சுடர்தரு மாப்போல்
நல்லன எல்லாம் நனவே அல்ல
அல்லல் மிகுமிந்த வாழ்வு எனக்கேன்
அம்மா சென்றனள் அரன் தாளினையே

புவனத்தின் தாயவள்போனதால் இங்கு
கடைக்குட்டியாம் இவள் புவனம் இவன்று
உடைந்தனள் மெலிந்தனள் தான் தனியெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்தும் சுருண்டும் துவண்டும் நடந்தும்
மீண்டு உலகினில் வாழ வேண்டுமே
இறைவன் அருளால் காலம் சுழல
பிள்ளைகள் இருவர் பிறந்தனர் சொல்ல

உள்ளம் மகிழ மூத்தவன் தசனந்தன்
பின்னர் பிறந்த இளையாள் மகுடபதி
அன்னவர் அன்புக்கும் ஆஸ்திக்கும் இரண்டென
கண்ணும் கருத்துமாய் வளர்த்துச் சீராட்டி
அண்ணனும் தங்கையும் ஆடிட ஓடிட
பண்ணிய நேர்த்திகள் விரதங்கள் முடித்து
பள்ளிக்கு அனுப்பி பாங்காய் கல்வியை
வெள்ளமாம் கற்பீர் விரைந்தே என்றனர

கொடிகாமம் சிவகாமி அம்பாள் அவளிடம்
படியேறி மாலைகள் சூட்டி தினவேளை
குலமோங்க நலமோங்க கும்பிட்ட குடும்பமாய்
பல ஆண்டு குறையின்றி வாழ்ந்தவள் புவனம்

சோம்பலை அறியாள் சுறுசுறுப்பானவள்
ஆம் நான் மாமாவையும் பார்ப்பேன் என்று
சங்கரா மாமாவை குறையின்றிப் பார்த்து
தங்கடன் செய்த மருமகள் மகளென
எங்கும் பேசிட இனிய தன் கடமையாய்
பங்கு கொண்டவள் பாங்குடைப் புவனம்

மகனாம் தசனும் கல்வியை முடித்து
தகுமெனக் கடையொன்று திறந்து நடத்திட
அம்மை புவனமும் அப்பா சோமுவும்
தம்மை உதவியாய் அதிலே இணைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் ஓங்க குலமும் ஓங்க
கடும்பல முயற்சிகள் செய்துமே உழைத்தனர்
காலம் உருண்டு கடுகி நடந்திட
மேலும் மீசாலை அதே ஊரினிலே
மகனாம் தசனுக்கு நடராஜர் ஆதீஸ்வரி
மிகவே தவமியற்றி வந்த மூத்தவளை
இணையெனக் கொண்டு கோகிலா தன்னை
துணையெனத் திருமணம் செய்துமே வைத்து
பேரன் அம்புஜன் பிறந்திட மலர்ந்து
ஆரா அன்புடன் அப்பம்மா நின்றனள்

பாடம் சொல்லி பல புத்தி சொல்லி
வாடாத செல்வம் கல்வி தானென்று
தன் மகள் மகுட பதியினைத் தரணியில்
நன்மகன் பட்டமே பெறவேண்டு மென்று
ஒவ்வொரு நாளும் உற்சாகப் படுத்தி
பவ்வியமாகப் பக்குவப் படுத்தி
கல்வியும் கற்க பல்கலைக் கழகத்தில்
அல்லும் பகலும் ஆனந்தப் பட்டவள்
நாட்டில் இளைஞர்கள் வெளிநாடு செல்ல
நாட்டமோ நீயும் போய் வருவாயங்கு
ஈட்டுவாய் பணமும் எங்கென் றாலும்
காட்டுவேன் பாதை என்றவள் புவனமும்
மகனும் தகப்பனும் கொழும்பு சென்றிட
மகளும் பல்கலை சென்று படித்திட
என்னவோ ஏதோ அது இது என்று
சொன்னவள் துணிவுடன் இருந்தவள் என்றும்
என்ன குறையோ கண்ணீறு பட்டதோ?
தன்னையே நொந்தவள் தான்புறப் பட்டனளோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் என்று காலத்தில் படுக்காத புவனம்
பாய் கட்டில் படுக்க வந்ததோ காலம்
சுந்தரம் கணவன் சோபை இழந்துமே
நொந்தவன் பணி ஆற்றிட கண்டவள்
மாறிடும் வருத்தம் மனமது துணிக
தேறுதல் சொல்லியே அம்பிகை சரண் என
கார்த்திகை வெள்ளியில் மகளை மருமகளை
பார்த்து வணங்குங்கள் மாவடி நாயகனை
சேர்த்து அனுப்பி வைத்து சிறகின்றிப் பறந்து விட
நேர்த்தி செய்தனனோ நாமிங்கு இவன்று அழ.

## மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையாரிடம் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும் பாடல்

கள்ளம் இலான் உன்மேல் கவனம் தான் கொண்டு
உள்ளம் களியுடனே உன்பின்னே வலம் வந்து
மெள்ள அடிஅழித்தே புவனம் கேட்டு நின்றாள்
வள்ளலே அவள் தனக்கு ஆத்ம சாந்தி அருள்வாயே.

## கொடிகாமம் நாவலடி சிவகாமி அம்மனிடம் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும் பாடல்

நாவல் மரமிகுந்து சோலை மிகவாகத்
தூவல் கேணி நீர் பாய்ச்சும் தூயோர் தான் அழைக்க
ஆவல் கொண்டமர்ந்த அன்னை சிவகாமியே
காவல் எனப் போற்ற கண்கண்ட தெய்வம் நீயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையே கொடிகாமத் தற்புதமாய் அமர்ந்தவளே
இம்மையில் மாந்தர்கள் இடரெல்லாம் தீர்ப்பவளே
காரணியே நாரணியே சாம்பவியே சங்கரியே
வேரறுத்த வினை தீர்க்கும் வித்தகியே சிவகாமி
நீ அழைத்த வேளையெலாம் நெஞ்சுருகி தான் பணிந்து
பூ மாலை சூட்டி உந்தன் பொற்பாதம் கேட்டாளே
வா என்று நீ அழைத்தாய் வந்தாள் புவனமுமே
தா என்று நாம் கேட்டோம் சாந்தியதை அருள்வாயே.

## தேறுதல் கொள்வோம்

*காசு பணம் காணி நிலம்*
*யாதொன்றும் வருவதில்லை*
*பூமி தனில் காண்பவைகள்*
*பொய்யாகி ஒருநாளே*
*பேசும் ஊர் மனை சுற்றம்*
*பிணம் என்று தாம் அகல*
*போகுமிடம் பின்னாலே*
*புண்ணியங்கள் தான் தொடரும்*
*ஏகு முன்னே செய்த பாவம்*
*அங்கு வந்து வாட்டு மென்றால்*
*ஊர்மாறும் உருமாறும்*
*பெயர் மாறும் ஜீவனா ரும்*
*பார் தன்னில் பரமனிடம்*
*வைத்த பற்றே நிஜம் ஆகும்*
*சீர் ஆகும் சித்தம் இஃது*
*தெளிந்து விட்டால் ஏற்றம் தானே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைமொழி

நீர்க்குமிழி போலத் தோன்றி நிலை இன்றி
நீங்கும் வாழ்வு
பார்தனிற் பிறப்போர் கொண்ட
பழவினைப் பயன் நுகர்ந்தே
தீர்ந்தபின் சிறிதும் தாங்கார்
தேகத்தை விட்டுச் செல்வார்
சேர் பிறவிப் பிணி நீங்கில்
சிவன தென்னிற் சேர்வார்

## அறிவுரைகள்

"பேசும் போது நிதானமாகவும் உள்ளுணர்வுடனும் பேசுக. பிறர் மனம் நோகப் பேசாதிருப்பது பெருந்தவமாகும்"

"தக்க தருணத்தில் செய்வது சிறு உதவியாயினும் அது பெரிய உதவியாகும். காலங்கடந்து மிகப் பெரிய உதவி செய்தாலும் அது பயனற்றதாய் ஆகிவிடும்."

*மனித வாழ்க்கையிலுள்ள பெரிய ஆச்சரியம் அன்பு நிறைந்தவர்களை எந்த இடத்தில் எப்போது எதற்காகச் சந்திக்கப் போகின்றோம் என்பதும், எங்கே, எப்போது, எதற்காகப் பிரியப் போகின்றோம் என்பதும் முன்கூட்டியே தெரியாமலிருப்பது தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் சோமசுந்தரம் புவனேஸ்வரி அவர்களின் மறைவை அறிந்து எங்கள் இல்லங்களுக்கு ஓடோடி வந்து எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும். மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும். இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த மட்டுவில் ரம்யன் அச்சகத்தாருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**குடும்பத்தினர்**


மீசாலை மேற்கு,
மீசாலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




◆அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**



Ramyan Printers. Madduvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org